திருமதி ஜி. லதா: வருவாய்த் துறையிடம் தருவதாக . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி. லதா பேசி முடித்தாகிவிட்டதா? (குறுக்கீடுகள்) சரி, பேசி முடியுங்கள்.

திருமதி ஜி. லதா: வருவாய்த் துறையிடம் கொடுப்பதாக அரசு சொன்னது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இதே அவையில் மிகப் பெரிய எதிர்ப்பைத் தெரிவித்தது. ஆனால், இன்றைய காலக்கட்டத்தில் முறைசாரா நல வாரியத்தில், தங்களுடைய பெயரைப் பதிவு செய்வதேற்கே, V.A.O. சான்றிதழை வாங்கிய பிறகுதான், நல வாரியத்திற்குக் கொண்டு செல்லமுடியும். இந்த அரசு மறைமுகமாக, வருவாய்த் துறையிடம் இதை ஒப்படைத்திருக்கின்றதா என்கின்ற சந்தேகம் என்பது வலுவாக எழுகிறது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களது உரையை முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) அவ்வளவுதான்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *24–2–2009* (செவ்வாய்க்கிழமை) காலை *9–30* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் *1–31* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

52. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் *2007–2008* ஆம் ஆண்டிற்கான நிதிக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கை. [*1989* ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *42/1989*) *35 (3)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

53. 2007–2008 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. [*1989* ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *42/1989*) *51 (3)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

2009 பிப்ரவரி 23]

54. 2006–2007 மற்றும் 2007–2008 ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாட்டில் ஊராட்சிகளின் பணி குறித்த ஆண்டறிக்கை. [2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காவது திருத்தச்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 34/2008) 166 ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

22. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து ஏழாவது அறிக்கை. (2008–2009)

23. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து எட்டாவது அறிக்கை. (2008–2009)

24. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து ஒன்பதாவது அறிக்கை. (2008–2009)

25. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நாற்பதாவது அறிக்கை. (2008–2009)

** *** ***

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS